Date.03.01.2025.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS. 467/2022

வா.சா.1

**பெயர்-** திரு. ரங்கராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் 1/5 பாகம் கேட்டு பாகபிரிவினை வழக்கு போட்டுள்ளேன். மொத்தம் 5.1/2 ஏக்கர் விஸ்தீரணம் உள்ளது. தாவா சொத்துக்களின் சர்வே எண். தெரியும். 51 மற்றும் 61 ஆகும். உட்பிரிவு தெரியாது. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் மொத்தம் 1 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நான் 67 சென்ட் நிலத்திற்கு மட்டும் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மாணிக்கம் கிரையம் பெற்ற சர்வே எண். 61/9 ல் அவர் வாங்கிய 1 ஏக்கர் நிலத்தில் 67 சென்ட் நிலம் தவிர மீதமுள்ள 33 சென்ட் நிலம் என் வசம் உள்ளது என்றால் இல்லை. பொதுவாக உள்ளது. நான் 61/9 ல் விற்ற நிலத்தை மட்டும் போட்டுள்ளேன். வா.சா.ஆ-21 ஆவணத்தில் நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் சர்வே எண். 61/9 ல் 1 ஏக்கர் என கண்டுள்ளது என்றால் சரிதான். மொத்தம் 15, 16 அயிட்ட சொத்துக்களை குறிப்பிட்டுள்ளேன். என் அப்பா கதிர்வேலுக்கு இரு மனைவிகள் ஆகும். அவர்கள் தனகண்ணு மற்றும் தாயார் அம்மாள் ஆவார்கள். தனக்கண்ணு உயிருடன் இருக்கும் போதே கதிர்வேலு தாயார் அம்மாளை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரிதான். எனக்கு பிரதிவாதிகள் 1, 6,7,10 முதல் 12 வரை

உள்ளவர்கள் போட்ட பதில் விவரம் தெரியும். அவர்கள் தாங்கள் சொத்து வாங்கிவிட்டதாக பதில் போட்டுள்ளார்கள். தாவா சொத்துக்களை நாங்களும், பிரதிவாதிகளும், கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்பதை காண்பிக்க எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்துக்களை நாங்களும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்று வழக்குரையில் வாதுரை எதையாவது முன்வைத்துள்ளோமா என்றால் கூறியுள்ளோம். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும், வழக்குரையில் அது போன்ற வாதம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் பாகபிரிவினை தவிர வழக்கில் வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை. நான் தாவாவிற்கு முன்பு வா.சா.ஆ. 12 முதல் 15 வரையிலான பத்திர விவரங்களை தெரிந்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த பத்திரத்தின் படி 26/12/2013 ந் தேதியில் எனது தாயார், மூர்த்தி ராமன், ஜானகிராமன், சாரதா, நிர்மலா ஆகியோர் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அது போன்று ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 13 ஆவணத்தில் 22/11/2018 ந் தேதியில் காசோலை எண். 224538 மூலமாக ரூபாய் 2,50,000/- பெற்றுக்கொண்டதாக அந்த கிரையப்பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. 224536 காசோலையானது எனது வங்கி கணக்கிற்கு செலுத்தப்பட்டு நான் வசூல் செய்து பணத்தை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் அந்த வங்கி கணக்கை தாக்கல் செய்ய தயாரா என்றால் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். நான் வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ 224536 காசோலை படி ரூபாய். 2,50,000/- பணமே பெறவில்லை

என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அது போன்ற வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 26/12/2013 ந் தேதியன்று குடும்ப உறுப்பினர்களான மூர்த்தி ராமன், ஜானகிராமன், என் தாயார் தனக்கண்ணு , சாரதா, நிர்மலா ஆகியோர் தாவா 5 வது அயிட்டமான சர்வே 61/9 ல் 1 ஏக்கர் முழுவதையும் பெண்களுக்கு ஒதுக்குவது என்றும், மீத சொத்துக்களை மூர்த்தி ராமனும், ஜானகிராமனும், தலா 1 ஏக்கர் 83 செண்ட் பிரித்துக்கொள்வது என்றும், அனைவரும் பரஸ்பரம் சம்மதித்து ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் தாயார் திருமணம் ஆகி 1.1/2 ஆண்டுகளில் திரும்பி அவரது தாய் வீட்டிற்கே வந்து விட்டார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் மகாராஜபுரத்தில் தான் மூர்த்திராமன் வீட்டில் வளர்ந்து வந்தேன் என்றால் மாணிக்கம் வீட்டில் வளர்ந்து வந்தேன். ஆனால் மாணிக்கம் உயிருடன் இல்லை. தாவா சொத்துக்களின் மின் இணைப்பு எண். 379 ஆனது மூர்த்தி ராமன் பெயரில் உள்ளது. ஏற்கனவே தாத்தா பெயரில் ஒரு மின் இணைப்பு இருந்து அது துண்டிக்கப்பட்டு மூர்த்தி ராமன் பெயரில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. நான் இந்த மின் இணைப்பு பற்றிய விவரத்தை எனது வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அது போன்று எதுவும் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி ராஜசேகர் தான் 5 ம் அயிட்ட சொத்தில் 1 ஏக்கரில் 67 சென்டை 3, 4 பிரதிவாதிகளிடம் இருந்து கிரையம் பெற்றதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போர்ஜரியாக கிரையம் செய்துள்ளார்கள். நான் 5 ம் அயிட்ட சொத்தில் என் தாயாரின் பாகத்திற்கான 33 செண்ட் மறுபயன் தொகையை பெற்றுக்கொண்டதால் தான் அந்த

33 சென்டை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால்சரியல்ல. நான் மொத்த சொத்தையும் தான் கேட்கிறேன். தாவா சொத்துக்களுக்கான பட்டா மாணிக்கம் பெயரில் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா 10 ம் அயிட்ட சொத்தில் 1 ஏக்கர் 35 சென்டில் 66.1/2 சென்ட் மட்டும் மாணிக்க கவுண்டர் , ராஜாம்பாளிடம் வாங்கினார். மாணிக்க கவுண்டருடன் பிறந்தவர்கள் அமிர்தாம்பாள், பாஞ்சாலி ஆவார்கள். அவர்கள் இறந்துவிட்டார்கள். அமிர்தாம்பாளின் பிள்ளைகள் தான் கலியபெருமாள், விபிஷ்ணன் ஆகியோர்கள் ஆவார்கள். பாஞ்சாலியின் பிள்ளைகள் தான் வெங்கட்டம்மாள், ராஜேந்திரன் ஆவார்கள். வா.சா.ஆ. 18 ஆவணத்திலும், தாவா 5 ம் அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தயார் 2021 ல் காலமாகிவிட்டார். அவர் இறப்புக்காலம் வரையில் அவர் எதுவும் வழக்கு போடவில்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் எந்த பகுதியிலும் பயிர் செய்து வருவதாக வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாயார் தனக்கண்ணு அம்மா பெயரில் உள்ள பட்டாவை பார்க்கவில்லை. அவர் பெயரில் பட்டா இல்லை. என் தாயார் தனியாக வாங்கியதாக நான் சொன்ன 61/21 ஆனது 33 சென்ட் நிலமாகும். அது தாவா சொத்திற்கு அருகில் தான் உள்ளது. அந்த சொத்தை கணபதியும், ஆறுமுகமும் என் தாயார் தனக்கண்ணு கிரையம் பெற்ற பத்திரத்தில் 1ம் பிரதிவாதி ஒரு சாட்சியம் என்றால் சரிதான். தாவா போட்ட காலத்தில் தாவா சொத்துக்களை நான் அனுபவித்து வந்தேன். தற்போது அனைத்து சொத்துக்களும் வழக்கு போட்ட காலத்தில் இருந்து சும்மா தான் உள்ளது. தாவா சொத்துக்கள் நகராட்சிக்கு உட்பட்ட டவுன் சர்வே

எண்களாக தாவா போடும் போதே மாற்றபட்ட விவரம் எனக்கு தெரியும். எனக்கு 5,9,10,11,13 ஆகிய சொத்துக்கள் முழு விஸ்தீரணத்தில் பகுதி சொத்துக்களாக தாவாவில் காட்டியுள்ளேன். ஆனால் அவற்றிக்கான 4 புற எல்லை போடவில்லை என்றால் சரிதான். நான் தாவாவில் போட்டுள்ள எந்த சொத்துக்களிலும் 2013 க்கு பிறகு நானோ என் தாயாரோ அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5- ம் அயிட்ட சொத்தில் என் தாயாருக்கு ஒதுக்கப்பட்ட வழக்கில் சேர்க்கப்படாத 33 சென்ட்டை தவிர வேறு சொத்துக்கள் எதிலும் பாகம் கோர எனது தாயாருக்கோ எனக்கோ உரிமை இல்லை என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களிலும் இன்னும் பாகம் பிரிக்கப்படவில்லை. 6,7 - பிரதிவாதிகள் பெயரிலான 08.06.2022 தேதியிலான பத்திர எண். 2968 மற்றும் 2969 ஆகிய ஆவணங்கள் சட்டப்படி செல்லும் என்றும், அதை செல்லாது என்று சொல்வதற்கு எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 6,7- பிரதிவாதிகளின் கிரைய விவரம் அந்த பத்திரம் எழுதிய ஒரு வாரத்திற்குள் தெரியும். தாவா சொத்துக்களில் கூட்டு அனுபவத்தில் இல்லாத நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி தாவா தாக்கல் செய்துள்ளது சரியல்ல என்றும் நான் உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஏற்கனவே குடும்ப உறுப்பினர்களுக்குள் எனது தாயார் ஒத்துக்கொண்டு பெற்றுக்கொண்டதை மறுக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா 5-ம் அ யிட்ட சொத்திற்குண்டான பணத்தை வாங்கியதாலும் அந்த சொத்து எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதாலும் தான் நான் அந்த சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும்

என்ற கெட்ட நோக்கத்தில் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2013 ம் ஆண்டில் நானும், என் தாயாரும் ஒரே குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் இல்லை. தனித்தனியாக வசித்து வந்தோம். அதே தெருவில் கடைசியில் வசித்து வந்தேன். நான் தாவாவிற்கு முன்பு பஞ்சாயத்து பேசியதாக வழக்குரையிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எதுவும் பாகம் பிரிபட தக்க சொத்துக்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எதிலும் எனக்கு பாக உரிமை இல்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.